***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 68/2016 – P.W. 4 /LW 7***

| | |
|---|---|
| *Name* | திரு. V.G. கௌதமர் - குடிமுறை மருத்துவர்<br>அரசு மருத்துவமனை கந்தர்வக்கோட்டை |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *53* |

*எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.*

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 30.03.2026*

*அரசு தரப்பில் முதல் விசாரணை*

1. நான் தற்போது கந்தர்வக்கோட்டை , அரசு மருத்துவமனையில் குடிமுறை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் ராமகிருஷ்ணன் என்ற எனது பெயரை தற்பொழுது V.G. கௌதமர் என பெயர் மாற்றம் செய்துள்ளேன்.

நான் கடந்த 12.11.2015 ஆம் தேதி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை , மன்னார்குடியில் உதவி மருத்துவராக பணிபுரிந்தபோது மாலை 7.55 மணிக்கு அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருக்கும்போது 25 வயது மதிக்கத்தக்க மன்னார்குடி மேல ஒத்தை தெருவை சேர்ந்த சித்ரா என்பவரும் , 42 வயது மதிக்கத்தக்க கண்ணம்மாள் என்பவரும் அவர்களை 2 தெரிந்த நபர்கள் அரிவாள் மற்றும் கட்டையால் மாலைல 05.30 மணிக்கு தாக்கியதாக கூறினார்.

சித்ரா என்பவருக்கு இடது காது மடலில் சிதைந்த காயம் இருந்தது. அவரை உள்நோயாளியாக மருததுவமனையில் அனுமதித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று சான்று வழங்கினேன். **மேற்படி விபத்து பதிவேட்டுடன் இணைந்த காயச்சான்று அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

அதே சம்பவத்தில் கண்ணம்மாள் என்பவருக்கு வெளிக்காயங்கள் எதுவும் இல்லை. அவரை வெளிநோயாளியாக சிகிச்சையளித்தேன். கண்ணாம்மாளுக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று சான்று வழங்கினேன். **மேற்படி விபத்து பதிவேட்டுடன் இணைந்த காயச்சான்று அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தாரகள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நோயாளி மாலை 05.30 மணிக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லியுள்ள நிலையில் 2 மணி நேரம் 25 நிமிடங்கள் தாமதமாகதான் சிகிச்சைக்கு வந்தார் என்றால் சரிதான். மேற்படி சம்பவம் அசேஷத்தில் நடைபெற்றதாக தான் சொல்லியுளளார்கள். குறிப்பிட்ட அசேஷத்தில் எங்கு நடைபெற்றது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் இரண்டு நபர்கள் தாக்கியதாக மட்டுமே சொன்னார்கள். ஆண் நபரா? பெண் நபரா ? என்று பாலினத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் நோயாளி தங்களை கம்பால் தாக்கியதாக எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். சித்ரா என்பவருக்கு மேற்சொன்ன முதல் விசாரணையில் காயங்களை தவிர வேறு காயங்கள் இல்லை என்று சொன்னால் சரிதான். அவ்வாறு இருந்திருந்தால் அதனை விபத்து பதிவேட்டில் குறித்திருப்பேன் என்றால் சரிதான். நோயாளி சொன்ன நேரத்திற்கு முன்பாகவோ, பின்பாகவோ மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். இவ்வழக்கில் ஆயுதங்கள் ஏதேனும் காட்டி போலீசார் கருத்துரை பெறவில்லை என்று சொன்னால் சரிதான். சாதாரணமாக வீட்டில் உள்ள நிலை படியிலோ அல்லது மற்ற இடங்களிலோ தவறுதலாக இடித்து காதில் அணிந்துள்ள தோட்டின் முனைக்கூட குத்தி மேற்சொன்ன காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்று சொன்னால் சரிதான். கண்ணாம்மாள் என்பவருக்கு எவ்வித காயமும், வலி உணர்வு இல்லை என்று விபத்து பதிவேட்டில் இல்லை என்று சொன்னால் சரிதான்.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.